முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2024 சனவரி

## (304) நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate & Personal Taxation)

2024-02-11
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு* : 15 *நிமிடங்கள்*
*விடையெழுத* : 03 *மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 09
வினாக்கள் : 09

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

(a) **வரையறுக்கப்பட்ட பில்ட் எக்ஸ்பேர்ட் (தனியார்) கம்பனி (BEL),** இலங்கையில் பல நிருமாணச் செயற்றிடங்களை மேற்கொள்வதற்காக இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனி ஆகும். இது இந்தியாவின் நிருமாணத் துறையில் மிகப்பெரிய ஜாம்பவானாக விளங்கும் **பில்ட் டெக் (இந்தியா) (BTI)** நிறுவனத்தின் ஒரு துணைக் கம்பனியாகும். **BEL** பெரும்பாலான உபகரணங்களையும் துணைச் சாதனங்களையும் இந்தியாவிலுள்ள அதன் தாய்க் கம்பனியிடமிருந்து பெற்றுக் கொள்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான இலங்கையின் வரிவிதிப்பு நோக்கத்திற்காக **BEL** இன் வதிவிட அந்தஸ்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) வரிவிதிப்பின் நான்கு (04) கோட்பாடுகளை (principles) **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

(a) கொழும்பில் வசிக்கின்ற **ஜிஹான்** என்பவருக்கு காலியில் சொந்தமாக 2 ஏக்கர் காணி உள்ளது. அவர் இந்தக் காணியை 2015 ஏப்ரல் 01 இல் ரூபா 5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்திருந்தார். அவர் இக்காணியை 2022 டிசெம்பரில் ரூபா 8 மில்லியனுக்கு விற்பனை செய்திருந்தார். இதன்போது தரகுக் கட்டணமாக ரூபா 200,000/- இனைச் செலுத்தியிருந்தார். 2017 செப்ரெம்பர் 30 இல் இந்தக் காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 6.5 மில்லியனாக இருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

இந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் **ஜிஹான்** செலுத்த வேண்டிய மூலதன வருவாய் வரியை (CGT) **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) ஏற்றுமதியாளர்களுக்கான பொதியிடல் பொருள்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள **வரையறுக்கப்பட்ட சுவசிறி டிரேடிங் (தனியார்) கம்பனியில்** புதிதாக நியமிக்கப்பட்ட சம்பளப்பட்டியல் கணக்காளர் நீங்கள் ஆவீர்கள். சமீபத்தில், சம்பளப்பட்டியல் ஆவணங்களைப் பரிசீலிப்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் உங்கள் கம்பனிக்கு வருகை தந்திருந்தனர். பரிசீலனையின் பின்னர், தனியாள் முற்பண வருமான வரி (APIT) தொடர்பான வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு ஆலோசனை வழங்கியிருந்தனர்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

APIT திட்டத்தின் கீழ் தொழில்தருநர் ஒருவரின் இரண்டு (02) கடப்பாடுகளைக் (obligations) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**நளின்** என்பவர் தொழில்முறைரீதியாக ஒரு வழக்கறிஞர் ஆவார். ஒரு நாள், **நளினின்** நண்பர் ஒருவர் அவரைச் சந்தித்து தனக்குச் சொந்தமான 50 ஏக்கர் பரப்பளவு கொண்ட கறுவாக் தோட்டத்தை ரூபா 30 மில்லியனுக்கு வாங்கிக் கொள்ளும்படி கேட்டிருந்தார். **நளின்** அதனை வாங்குவதற்கு விருப்பம் கொண்டிருந்த போதிலும், அவரிடம் போதுமான அளவு பணம் இருக்கவில்லை. எவ்வாறாயினும், அவரால் சில வருங்காலக் கொள்வனவாளர்களிடமிருந்து ரூபா 20 மில்லியனைத் திரட்ட முடிந்தது. இதன்போது திரட்டப்பட்ட தொகைக்காக அந்தத் தோட்டத்தின் 75% இனை பரிமாற்றம் செய்வதற்கும் உடன்பாடு ஏற்பட்டது.

இரண்டு மாதங்களுக்குள் கொடுக்கல் வாங்கலை நிறைவு செய்வதற்கு ஒப்புக்கொண்ட **நளின்** ரூபா 15 மில்லியனை முற்பணமாகச் செலுத்தியிருந்தார். இரண்டு மாதங்களின் முடிவில், அவர் தோட்டத்தை கொள்வனவு செய்து, முற்பணமாகத் திரட்டிய பணத்திற்குரிய கொள்வனவாளர்களுக்கு 75% தோட்டத்தினை பரிமாற்றம் செய்திருந்தார். ஆறு மாத காலத்தில் முழு நிலத்தையும் அவரால் விற்க முடிந்தது. இந்தக் கொடுக்கல் வாங்கல் மூலம் அவருக்கு ரூபா 5 மில்லியன் நிகர இலாபமாகக் கிடைத்திருந்தது.

இவ்வகையான கொடுக்கல் வாங்கலொன்றில் அவர் ஈடுபட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

இந்தக் கொடுக்கல் வாங்கல் ஊடாக **நளின்** சம்பாதித்த இலாபத்தை வரி நோக்கங்களுக்காகக் கவனத்திற் கொள்ள வேண்டுமா என்பதை 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் *மஹாவிதாரண எதிர் CIR* என்ற வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

(a) 2018 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டத்தினால் 2018 ஆம் ஆண்டில் சுற்றுலாப்பயணிகள் VAT மீளளிப்புத் திட்டம் (TVRS) அறிமுகப்படுத்தப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

சுற்றுலாப்பயணி ஒருவர் சுற்றுலாப்பயணிகள் VAT மீளளிப்புத் திட்டத்திற்கு தகைமை பெறுவதற்குப் பூர்த்தி செய்ய வேண்டிய இரண்டு (02) தேர்வுநிபந்தனைகளைக் (criteria) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட HP (தனியார்) கம்பனி** ஆலோசனை சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பனியாகும். 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான அதன் மொத்தப் புரள்வு (turnover) ரூபா 52,000,000/-.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக **வரையறுக்கப்பட்ட HP (தனியார்) கம்பனி** செலுத்த வேண்டிய சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியைக் (SSCL) **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட டேஸ்ட் (தனியார்) கம்பனி** இலங்கை இனிப்பு வகைகளைத் தயாரித்து அவற்றை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் கம்பனியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டுள்ளன :

(1) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டு காலப்பகுதியில் அதன் வருமான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன (VAT உள்ளடக்கப்படாத) :

| | ரூபா |
|---|---|
| ஏற்றுமதிகள் | 6,692,000 |
| SVAT பதிவுசெய்த நபர்களுக்கான உள்நாட்டு விற்பனைகள் | 9,368,800 |
| ஏனைய உள்நாட்டு விற்பனைகள் | 17,399,200 |

(2) கம்பனியானது காலாண்டுக் காலப்பகுதியில் கீழ்வரும் உள்ளீட்டு வரிகளைச் செலுத்தியிருந்தது :

| | ரூபா |
|---|---|
| பொதியிடும் பொருள்களின் இறக்குமதி மீது | 845,000 |
| உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது | 1,645,000 |
| முகாமைப் பணிப்பாளர் பயன்படுத்தும் மோட்டார் காரின் பழுதுபார்ப்புகள் மீது | 14,500 |

(3) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு VAT தொகை ரூபா 36,000/-.

(4) கம்பனி, மாதாந்த VAT தவணைக்கட்டணங்களாக ரூபா 50,000/- செலுத்தியிருந்தது.

*(நியம VAT வீதம் 15% எனக் கொள்க.)*

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக செலுத்த வேண்டிய மீதி (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதிசேர் வரியை (VAT) **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

## வினா 06

**T & S Property Valuers** என்பது **தாரக** மற்றும் **சுனிமல்** ஆகிய இரு நண்பர்கள் சேர்ந்து முன்னெடுக்கின்ற ஒரு பங்குடமை ஆகும். **தாரக** ஒரு படவரைஞர் என்பதுடன் **சுனிமல்** ஒரு பொறியியலாளர் ஆவார். அவர்கள் இருவரும் வணிகத்தின் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்ள உடன்பட்டுள்ளனர்.

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொழிப்பாக்கப்பட்ட வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது :

| | **ரூபா** |
|---|---:|
| மொத்த இலாபம் | 16,200,000 |
| பிற வருமானம் - நிலையான வைப்புகள் மீதான வட்டி வருமானம் (மொத்தம்) | 3,400,000 |
| – வாடகை வருமானம் | 1,500,000 |
| கழி : நிருவாகச் செலவினங்கள் | (13,500,000) |
| **பங்குடமையின் நிகர இலாபம்** | **7,600,000** |

மேற்படி இலாபத்தைக் கணிக்கும்போது கீழ்வரும் செலவினங்கள் கழிக்கப்பட்டுள்ளன :

(1) **தாரக** மற்றும் **சுனிமல்** ஆகியோர் முறையே வருடாந்தம் ரூபா 2,000,000/- மற்றும் ரூபா 4,000,000/- சம்பளங்களைப் பெற உரித்துடையவர்கள்.

(2) சம்பளத்திற்கு மேலதிகமாக, **சுனிமல்** தொழில்முறைக் கட்டணமொன்றாக மாதாந்தம் ரூபா 100,000/- பெறுவதற்கு உரித்துடையவர்.

(3) **தாரகவின்** மனைவி வணிகத்தின் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றுவதுடன் அவருக்கு ஒவ்வொரு மாதமும் ரூபா 80,000/- செலுத்தப்படுகிறது.

(4) புற்றுநோய் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட காசு நன்கொடை ரூபா 1,000,000/-.

(5) ஆண்டின் காலப்பகுதியில், ரூபா 4,000,000/- கிரயத்தில் ஒரு புதிய போட்டோபிரதி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டதுடன் நிருவாகச் செலவினங்களின் கீழ் ஆண்டிற்கான தேய்மானமாக ரூபா 400,000/- பதியப்பட்டிருந்தது.

(6) கட்டடத்தின் ஒரு பகுதி ரூபா 125,000/- மாத வாடகைக்கு மற்றுமொரு கம்பனிக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

(7) வட்டி வருமானம் மற்றும் வாடகை வருமானங்கள் மீது முற்பண வருமான வரி (AIT) / நிறுத்தி வைத்தல் வரி (WHT) கழிக்கப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

வரிமதிப்பாண்டு 2022/23 இற்காக பங்குடமை செலுத்த வேண்டிய வருமான வரியை **மதிப்பிடுக.**

(10 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட சுப்பர் (தனியார்) கம்பனி** இலங்கையில் வதிவுள்ள ஒரு கம்பனியாகும். இது கடதாசிப் பொருள்களைத் தயாரிக்கும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. மதிப்பீடு செய்யப்பட்ட செலுத்த வேண்டிய வருமான வரிக் கூற்றின்படி, கம்பனியானது வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான அதன் வருமான வரிப் பரிப்பு ரூபா 43,500,000/- என மதிப்பிட்டுள்ளது. கம்பனி முதல் இரண்டு தவணைக்கட்டணங்களாக ரூபா 20,000,000/- இனைச் செலுத்தியிருந்தது. மேலும், முதல் மூன்று காலாண்டுகளுக்கான வட்டி வருமானம் மீது முற்பண வருமான வரி (AIT) / நிறுத்திவைத்தல் வரியாக (WHT) ரூபா 26,400/- கழிக்கப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான மூன்றாவது தவணைக் கட்டணமாக செலுத்த வேண்டிய தொகையை **மதிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான மூன்றாவது தவணைக் கட்டணக் கொடுப்பனவுக்கான உரிய திகதியைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான வருமான வரித் திரட்டைத் தாக்கல் செய்வதற்கான உரிய திகதியைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(d) கம்பனியானது உரிய திகதிக்கு முன்னர் வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான வருமான வரித் திரட்டினைத் தாக்கல் செய்ததாகக் கருதி, வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான திருத்தப்பட்ட மதிப்பீடொன்றை வழங்குவதற்கான பொருத்தமான கால எல்லை (time bar) ஏற்பாடுகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட பெஷன் (தனியார்) கம்பனி** இலங்கையில் வதிவுள்ள ஒரு கம்பனியாகும். இது தைக்கப்பட்ட ஆடைகளை இறக்குமதி செய்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. கீழ்வரும் தகவல்கள் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட பெஷன் (தனியார்) கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

*(வரிமதிப்பாண்டு 2022/23 காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வருமான வரித் திருத்தங்கள் காலப் பகுதியைப் பொருட்படுத்தாது முழு வரிமதிப்பாண்டிற்கும் பொருத்தமானது எனக் கருதுக.)*

(1) அனைத்து செலவினங்களும் தாக்கல் செய்யப்பட்டு, அனைத்து வருமானங்களும் செலவு வைக்கப்பட்டதன் பின்னர் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முன்னரான நிகர இலாபம் ரூபா 64,250,000/- ஆகும். கம்பனியின் மொத்தப் புரள்வு ரூபா 894,000,000/-.

(2) பிற வருமானத்தின் கூறுகள் :

| | **ரூபா** |
|---|---|
| மோட்டார் வாகன விற்பனை மீதான இலாபம் | 216,000 |
| பங்கிலாப வருமானம் - பெற்ற பங்கிலாபத்திலிருந்து | 650,000 |
| திறைசேரி உண்டியல்களிலிருந்தான வட்டி வருமானம் | 400,000 |
| | **1,266,000** |

(3) நிருவாகச் செலவினங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்குகின்றன :

- ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் ரூபா 4,860,000/-.
- ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 4,200,000/-.
- ஆண்டின் காலப்பகுதியில் கம்பனி அதன் வருங்கால வாடிக்கையாளர்களை மகிழ்வூட்டுவதற்காக ரூபா 320,000/- இனைச் செலவு செய்திருந்தது.
- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தாமதக் கொடுப்பனவுக்கான தண்டப் பணமாக ரூபா 136,000/- செலுத்தப்பட்டது.
- வெளிநாட்டு வழங்குநர்களை சந்திப்பதற்கான பணிப்பாளர்களின் வெளிநாட்டுப் பயணத்திற்காக ரூபா 800,000/- செலவிடப்பட்டது.

(4) விநியோகச் செலவினங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்குகின்றன :

- உள்நாட்டு ஊடகங்களில் விளம்பரப்படுத்தலுக்கான செலவு ரூபா 635,000/-. இது ஒரு புதிய களஞ்சியசாலையை அமைப்பதற்குப் பொருத்தமான ஒரு காணியைக் கண்டறிவதற்காக செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரமொன்றின் கிரயமான ரூபா 50,000/- இனை உள்ளடக்கியுள்ளது.
- கம்பனியானது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபா 500,000/- பெறுமதியான புதிய ஆடைகளை அன்பளிப்புச் செய்திருந்தது. மேலும், சிறுவர் இல்லமொன்றைப் பராமரிக்கின்ற அங்கீகரிக்கப்பட்ட தரும ஸ்தாபனமொன்றுக்கு ரூபா 600,000/- அன்பளிப்புச் செய்யப்பட்டது.

(5) ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| சொத்துக்கள் (கிரயம்) | 01.04.2022 இல் மீதி (ரூபா) | சேர்ப்பனவுகள் / கொள்வனவுகள் (ரூபா) | விற்பனைகள் (ரூபா) | 31.03.2023 இல் மீதி (ரூபா) |
|---|---|---|---|---|
| மோட்டார் லொறிகள் | 26,900,000 | - | (2,600,000) | 24,300,000 |
| அலுவலக உபகரணம் | 2,150,000 | 460,000 | - | 2,610,000 |
| கணினிகள் | 1,430,000 | - | - | 1,430,000 |
| கணினி மென்பொருள் | - | 620,000 | - | 620,000 |
| **மொத்தம்** | **30,480,000** | **1,080,000** | **(2,600,000)** | **28,960,000** |

- வரிமதிப்பாண்டு 2019/20 காலப்பகுதியில் ரூபா 2,600,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் லொறி 2023 மார்ச் மாதத்தில் ரூபா 2,850,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த லொறி பொருள்களை விநியோகிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.
- ஆண்டின் காலப்பகுதியில், ஒரு புதிய கணக்கீட்டுப் பொதியை கம்பனி கொள்வனவு செய்திருந்தது. அதன் பயன்தரும் ஆயுட்காலம் 10 ஆண்டுகள் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- விசேடமாகக் குறிப்பிடப்பட்டால் அன்றி, 2022 ஏப்ரல் 01 இலான அனைத்துச் சொத்துக்களும் வரிமதிப்பாண்டு 2019/20 இல் கொள்வனவு செய்யப்பட்டவை ஆகும்.

(6) கீழ்வரும் பிற தகவல்களும் தரப்பட்டுள்ளன :

- ஆண்டின் காலப்பகுதியில் ஓய்வுபெற்ற ஊழியர் ஒருவருக்கு பணிக்கொடையாக ரூபா 625,000/- செலுத்தப்பட்டது.
- கம்பனியானது வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கட்டணங்களாக ரூபா 10,000,000/- இனைச் செலுத்தியிருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

வரிமதிப்பாண்டு 2022/23 இற்காக **வரையறுக்கப்பட்ட பெஷன் (தனியார்) கம்பனியின்** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரிமதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) வருமான வரி

*(குறிப்பு: ஏதாவது செலவுகளை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

## வினா 09

**சாலி** என்பவர் **வரையறுக்கப்பட்ட கொழும்பு ஆங்கில அக்கடமி (தனியார்) கம்பனியில்** *(இதன் பின்னர் 'கம்பனி' என குறிப்பிடப்படும்)* முழு நேர ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

**சாலி** தொடர்பான கீழ்வரும் தகவல்கள் வரிமதிப்பாண்டு 2022/23 *(இதன் பின்னர் 'ஆண்டு' எனக் குறிப்பிடப்படும்)* தொடர்பாகத் தரப்பட்டுள்ளன. :

*(வரிமதிப்பாண்டு 2022/23 காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வருமான வரித் திருத்தங்கள், காலப் பகுதியைப் பொருட்படுத்தாது வரிமதிப்பாண்டு முழுமைக்கும் பொருத்தமானது எனக் கருதுக.)*

(1) ஊழியத்திலிருந்தான (Employment) வருமானம்:

- கம்பனியிலிருந்து கிடைத்த மாதமொன்றுக்கான மொத்தச் சம்பளம் ரூபா 180,000/-.
- கம்பனி அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு தனியார் மருத்துவ காப்புறுதித் திட்டத்தை வழங்குகிறது. 2022 டிசெம்பரில், கம்பனியானது **சாலி** சார்பாக ரூபா 96,000/- இனை வருடாந்த தவணைக் கொடுப்பனவாகச் செலுத்தியிருந்தது.
- **சாலி** கம்பனியால் வழங்கப்பட்ட ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிக்கிறார். இதற்காக கம்பனி மாதாந்தம் ரூபா 45,000/- செலுத்துகிறது. இவ்வாறு கம்பனியால் வழங்கப்படும் வதிவிடத்தின் பொருட்டு **சாலியின்** சம்பளத்திலிருந்து மாதாந்த அடிப்படையில் ரூபா 10,000/- கழிக்கப்படுகிறது.
- மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு ரூபா 40,000/-.
- 2022 நவெம்பரில், மாநாடு ஒன்றிற்காக கம்பனியைப் பிரதிநிதித்துவப்படுத்தி **சாலி** ஜேர்மனிக்கு அனுப்பப்பட்டார். இதற்கான பயணச்சீட்டு மற்றும் தங்குமிடத்திற்கான செலவு ரூபா 500,000/- இனையும் கம்பனியே ஏற்றுக் கொண்டது.
- ஆண்டிற்காகக் கழிக்கப்பட்ட தனியாள் முற்பண வருமான வரி (APIT) ரூபா 266,400/-.

(2) **சாலி** ஒவ்வொரு வார-இறுதி நாட்களிலும் தரம் 10 மாணவர்களுக்கு தனியார் வகுப்பொன்றை நடத்துகிறார். ஆண்டின் காலப்பகுதியில் அதன் மூலம் கிடைத்த வருமானம் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| தனியார் வகுப்பு வருமானம் | | 3,600,000 |
| **கழி : கொடுப்பனவுகள்** | | |
| பணித்தொகுதியினருக்கான சம்பளம் | 600,000 | |
| பயிற்சிக் கையேடுகளுக்கான செலவு | 1,680,000 | |
| தொலைபேசிக் கட்டணங்கள் (இதில் 20% ஆனவை அவரது தனிப்பட்ட தொலைபேசிக் கட்டணமாகும்) | 150,000 | |
| தேய்மானம் | 100,000 | (2,530,000) |
| **நிகர இலாபம்** | | **1,070,000** |

மேற்படி தேய்மானமானது வரிமதிப்பாண்டு 2021/22 இல் ரூபா 750,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(3) ஆண்டின் காலப்பகுதியில், **சாலி** கீழ்வரும் வட்டி வருமானங்களைப் பெற்றுள்ளார்:

| விபரம் | பெற்ற திகதி | தொகை (மொத்தம்) (ரூபா) | கழிக்கப்பட்ட AIT (WHT) (ரூபா) |
|---|---|---|---|
| நிலையான வைப்பு மீதான வட்டி | 02.02.2023 | 500,000 | 25,000 |
| திறைசேரி உண்டியல்களிலிருந்தான வட்டி | 01.03.2023 | 700,000 | - |

(4) பங்கிலாப வருமானமும் பங்குகளின் விற்பனை மூலமான இலாபமும் :

- 2022 டிசெம்பரில், விலைகோரப்பட்ட பொதுக் கம்பனிகளின் பங்குகளது விற்பனை மூலம் ஈட்டப்பட்ட இலாபம் 200,000/- ஆகும்.
- 2023 மார்ச் இல் விலைகோரப்பட்ட பொதுக் கம்பனிகளிடமிருந்து (பெற்ற பங்கிலாபத் திலிருந்து செலுத்தப்பட்டது) பெற்ற பங்கிலாப வருமானம் ரூபா 300,000/-.

(5) 2022 யூலையில், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 'மருத்துவ பீடத்திற்கு' ரூபா 400,000/- பெறுமதியான மருத்துவ உபகரணங்களை அவர் நன்கொடையாக அளித்திருந்தார்.

(6) வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாக ரூபா 350,000/- இனை அவர் செலுத்தியிருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

வரிமதிப்பாண்டு 2022/23 இற்கு **சாலிக்காக** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக**:

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) வருமான வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின்.

***(குறிப்பு:*** *ஏதாவது வருமானம் விரிவிதிக்கத்தக்கது அல்ல எனின், அதனைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |